**தலைப்பு 227 – ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் 2021 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தைத் தவிர, நிதிக்கூற்றுக்கள் 2021 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்கவும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடியவாறான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களமானது வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்

கூடியவாறு தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேண வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டின் பொருட்டு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து அதனை பேணுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் செயற்திறன் அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமைய முறைமையை ஆக்கபூர்வமாக்குவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களது கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதென நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்ட சான்றுறுதிப்படுத்தலாகும். எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதன் உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடுமாதலால் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ள வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும்போதும் மதிப்பிடும்போதும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பிரபலமாவதால் தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்த்துக் கொள்ளல் என்பன மோசடி ஏற்படக் காரணமாக அமையலாம்.

- சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வம் தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிடுவதற்குக் கருதவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளது உறுதியான தன்மை,கணக்கீடுமதிப்பீடுகளது நியாயபூர்வத் தன்மை மற்றும் முகாமைத்துவம் மேற்கொண்ட தொடர்புடைய வெளிப்படுத்தல் என்பன மதிப்பாய்வு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களது கட்டமைப்பும் உள்ளடக்கமும் தொடர்பாக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கலும் சம்பவங்களும் நியாயமாக உள்ளடங்கி உள்ளதுடன் வெளிப்படுத்தலை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்கள் ஒட்டு மொத்தமாகச் சமர்ப்பிக்கப்பட்டும் உள்ளன.

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன என்பதாக,

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

#### (அ) மீண்டெழும் செலவினங்கள்

நிதிக்கூற்றுக்களுக்குரிய மீண்டெழும் செலவினங்களை கணக்கு வைக்கும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஏனைய அமைச்சு / திணைக்களத்தினால் இந்த திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 609,218,645 ஆன போதிலும் திறைசேரியின் அச்சீட்டு பதிவுகளின் பிரகாரம் அது ரூபா 609,514,326 ஆக காண்பிக்கப்பட்டமையால் ரூபா 295,681 ஆன இணக்கமின்மையுடன் அறிக்கையிடப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் ஏனைய அமைச்சுகள் மற்றும் திணைக்களத்தால் இத்திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 609,218,645 ஆக கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. | செலவினங்கள் சரியாக கணக்கு வைத்தல். |
| (ii) | காசுப்பாய்ச்சல் கூற்றின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் காண்பிக்கப்பட்டிருந்த மானியங்கள் மற்றும் மாற்றல்களின் பெறுமதி ரூபா 3,946,489 ஆன போதிலும் ஏசீஏ 2 (ii) மாதிரியிலான காசுப் புத்தகத்தின் பிரகாரம் அது ரூபா 3,882,466 ஆக காண்பிக்கப்பட்டிருந்த மையால் காசுப்பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 64,023 இனால் பதிவு செய்யப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றிற்கு மானியங்கள் மற்றும் மாற்றல்களின் பெறுமதிகளை சீராக்கும் போது தாமதத்தின் காரணமாக அச்செலவின விடயங்களின் செலவினக் குறிப்புக்கள் சீராக்கப்பட்டிராமையால் அவ்வேறுபாடு உருவாகியுள்ளது. | சரியான தகவல்கள் கணக்குகளின் மூலம் முன்வைத்தல். |

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் தனிப்பட்ட மீதிகளின் பதிவேட்டின் பிரகாரம் திணைக்களத்திற்கு அறவிடப்பட வேண்டிய மொத்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 138,870,752 ஆன போதிலும் கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 138,872,896 ஆனமையால் தனிப்பட்ட மீதிகள் மற்றும் கட்டுப்பாட்டுக் கணக்குகளுக்கு இடையே ரூபா 2,144 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வேறுபாடு 2020 ஆம் ஆண்டினுள் கணக்காய்வினால் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு வரையிலும் திருத்தப்பட்டிருக்க வில்லை. | அவதானிப்புக்களுக்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பதில் கிடைத்திருக்கவில்லை. | சரியான தகவல்களை கணக்குகள் மூலம் சமர்ப்பித்தல் |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2015 யூலை 20 ஆந் திகதிய அரச நிதி கொள்கைகள் சுற்றறிக்கையின் 01/2015 ஆம் இலக்க 07 ஆம் பந்தியின் பிரகாரம் இத்திணைக்களத்தினால் அரையாண்டு வருமான அறிக்கைகள் உரிய காலப்பகுதி நிறைவடைந்து தினத்திலிருந்து 15 நாட்களினுள அரச நிதிக் கொள்கைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | உரிய காலப்பகுதி நிறைவடைந்து 15 நாட்களினுள் குறித்த அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வருமானங்கள் உரிய முறையில் அறிக்கையிடுதல். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2021 திசெம்பர் 08 ஆந் திகதிய உள்ளகச் சுற்றறிக்கையின் DRP/OP/01/DS/03 (இணைப்பு iii) பிரகாரம் பிரதேச செயலகத்தினால் வருமான அறிக்கைகள் தலைமை அலுவலகத்திற்கு வழங்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான 56 பிரதேச செயலகங்கள் உரிய முறையில் மாதாந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் 2022 பெப்ரவரி 24 ஆந் திகதிய ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் உதவி சேவைகள் (Help Desk) பரீட்சிப்பின் போது வெளிப்படுத்தப்பட்டது. | அவதானிப்புக்களுக்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பதில் கிடைத்திருக்கவில்லை. | உள்ளக சுற்றறிக்கை களுக்கு இணங்கியிருத்தல் வேண்டும். |
| (இ) | ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் 2021 ஆம் ஆண்டின் மொத்த வருமானம் ரூபா 198,886,160 ஆன போதிலும் 2021 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் அது ரூபா 198,885,410 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் இறுதியில் திருத்தப்பட்ட திறைசேரி அச்சீட்டு பதிவுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டமையால் 2021 ஆம் ஆண்டிற்கான செயல்முன்னேற்ற அறிக்கை திருத்தப்பட்ட திறைசேரியின் அச்சீட்டு பதிவிற்கு முன்னர் தயாரிக்கப்பட்டுள்ளது. | வருமானங்களை சரியாகவும் உரிய காலத்தில் இனங்காணல். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான ஒட்டு மொத்த செலவினங்களின் தேறிய நிதியேற்பாடு ரூபா 1,476,150,000 ஆக காணப்பட்டதுடன் திறைசேரயீின் கணனி அச்சீடுகளின் பிரகாரம் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவினம் ரூபா 1,261,459,299 ஆனமையால் | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இணங்கியவாறு சேமிப்புக்கள் மற்றும் கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக எதிர்பார்த்த விதத்தில் செலவினங்கள் மேற்கொள்ளாமையால் ஏற்பட்டுள்ளது. | சரியானதும் நடைமுறைக்கு பொருத்தமானது மான மதிப்பீடுகளை தயாரித்தல் |

| | | | |
|---|---|---|---|
| | ஒட்டுமொத்த சேமிப்பானது ரூபா 214,690,701 அல்லது மொத்த தேறிய நிதியேற்பாட்டின் 15 சதவீதமாக காணப்பட்டது. அவ்வாறே செலவின விடயங்களின் பிரகாரம் பரீட்சிப்பின் போது ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளில் 61 சதவீதத்திலிருந்து 92 சதவீதம் வரையிலான வீச்சில் இச்சேமிப்புக்கள் வியாபதித்திருந்தன. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது மூலதன செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட தேறிய நிதியேற்பாடான ரூபா 210,950,000 தொகை ரூபா 89,436,526 மாத்திரம் செலவிடப்பட்டிருந்த மையால் சேமிப்பானது ரூபா 121,513,474 அல்லது தேறிய மூலதன நிதியேற்பாட்டின் 58 சதவீதம் ஆகும். செலவின விடய இலக்கம் 2509 இன் கீழ் ஏனைய மூலதன செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 180,000,000 தொகையில் ரூபா 118,919,524 எஞ்சியிருந்தமை இதற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது. | செலவின விடய இலக்கம் 2509 இன் கீழ் ரூபா 56 மில்லியன் தனியார் நிறுவனமொன்றிற்கு செலுத்துவதற்குள்ள பணத்திற்காக கொடுப்பனவு மேற்கொள்வதற்கு அங்கீகாரம் கிடைக்காமை மற்றும் ஒரு மில்லியன் அட்டைகளின் கொள்வனவினை ஆரம்பிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட நிதியேற்பாடுகளின் ஒரு பகுதியும் காணப்பட்ட காரணத்தால் இச்சேமிப்பானது நிலவுகின்றது. | சரியானதும் நடைமுறைக்கு பொருத்தமானது மான மதிப்பீடுகளை தயாரித்தல் |
| (இ) | மீளாய்வாண்டின் போது அச்சிடப்பட்ட மொத்த அடையாள அட்டையின் எண்ணிக்கையானது 442,341 ஆக காணப்பட்டதுடன் அவற்றுள் 26,489 அல்லது 6 சதவீதமானவை குறைபாடுகளை கொண்டிருந்தன. குறைபாடுகளையுடைய அடையாள அட்டைகளின் கிரயமானது ரூபா 1,669,286 ஆன போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | அச்சிடப்பட்ட குறைபாடுகளையுடைய அடையாள அட்டைகள் நிதிப்பிரமாணம் 102 இன் கீழ் நட்டங்களுக்கு எடுக்கப்படும் இழப்பொன்றாக வரைவிலக்கணப்படுத்தப் படவில்லை. அவ்வாறே சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிதியல்லாத சொத்தொன்றின் கீழ் கணக்கு வைக்கப்படுதலும் இடம்பெறவில்லை. பொருட் பதிவேட்டு பண்டமொன்றாக கணக்கு வைத்தல் இடம்பெறாமையால் நட்டமொன்றாக கணக்கு வைத்தல் இடம்பெறவில்லை. | நிதிக்கூற்றுக்களின் சரியான தரவுகளை வெளிப்படுத்தல். |

**2.3 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஏற்படுத்தப்படல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தனியார் நிறுவனமொன்றிலிருந்து 2020 ஆம் ஆண்டின் போது மேற்கொண்ட அட்டைகளின் கொள்வனவுக்காக ரூபா 56,492,100 தீர்ப்பனவு செய்ய வேண்டியதாக காணப்பட்டது. அது 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் பொறுப்புக்களாக கணக்கு வைக்கப்படாது கடப்பாடாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுத்தி வைக்கப்பட்ட தொகையை செலுத்துதல் தொடர்பில் அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக வரைவாக்கப்பட்ட அமைச்சரவை பத்திரம் அங்கீகாரத்திற்காக அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பொறுப்புக்களைசரியாக நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குதல் மற்றும் உரிய தீர்ப்பனவுகளை முறைமைப் படுத்தல். |
| (ஆ) எழுதுகருவிகளை கொள்வனவு செய்வதற்காக செலவின விடய இலக்கம் 227-01-01-1201 இன் கீழ் ஒதுக்கப்பட்ட தேறிய நிதியேற்பாட்டினை விஞ்சி ரூபா 1,347,116 ஆன கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | செலவின விடய இலக்கம் 1201 இன் கீழ் நிதியேற்பாடு பெருமளவில் எஞ்சியுள்ளதாக மேற்கொள்ளப்பட்ட எடுகோளின் அடிப்படையில் அச்சந்தர்ப்பத்தில் நிலவிய தேவைப்பாட்டின் பிரகாரம் ஏனைய பொறுப்புக்களை கொள்வனவு செய்தல் இடம்பெற்றுள்ளது. | செலவின முகாமைத்துவத்தை முறைமைப் படுத்தல். |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளது.

| | அவதானிப்புகள் | | | |
|---|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| | ரூபா | | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| (i) நிதிப்பிரமாணம் 135(5) | - | திணைக்களத்தினால் வருமானங்கள் தொடர்பான அதிகாரத்தை ஒப்படைத்தல் இடம்பெற்றிருக்கவில்லை | 2022 ஆம் ஆண்டு முதல் வருமானங்கள் தொடர்பிலான அதிகாரங்களை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தொடர்புடைய பிரமாணங்களுக்கு இணங்குதல். |
| (ii) நிதிப்பிரமாணம் 565(4) | - | வைப்புக்களில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை அங்கீகரிப்பதற்காக அதிகாரமளிக்கப்பட்ட பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரினால் சிறு கையொப்பம் இடப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் பேணப்படும் பொது வைப்பு பேரேட்டில் கொடுப்பனவு அதிகாரங்களை உடைய பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவரினால் அங்கீகரிக்கப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | வைப்பு பேரேட்டினுள் தற்காலிகமாக உள்ளடக்கப்பட்டுள்ள பணம் மீளளிப்புக்களில் சில சந்தர்ப்பங்களில் அதிகாரமுடைய பதவிநிலை உத்தியோகத்தரின் சிறு கையொப்பத்தை இடுவதில் தாமதம் காரணமாக கைவிடப்பட்டுள்ளது. | - மேற்படி - |

**2.5 முற்பணங்களை வழங்குதல் மற்றும் தீர்ப்பனவு செய்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 01 முதல் 14 வருடங்கள் வரையான காலப்பகுயினுள் மரணமடைந்த, பணிவறிதாக்கப்பட்ட மற்றும் சேவையை விட்டுச் சென்ற 04 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 229,568 கூட்டுத்தொகை 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுக்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பதில் கிடைத்திருக்கவில்லை. | செயற்திறனாக கடன் மீதிகளை தீர்ப்பனவு செய்தல். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் அதன் செயல்முன்னேற்றத்தை பரீட்சிக்கும் போது திட்டமிடப்பட்ட செயற்பாடுகளின் செயல்முன்னேற்றமானது 8 சதவீதத்திலிருந்து 50 சதவீதம் வரை வியாபித்திருந்த 4 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | அவதானிப்புக்களுக்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பதில் கிடைத்திருக்கவில்லை. | போதியளவான செயலாற்றல் மட்டத்தினை பேணிச் செல்லல். |
| (ஆ) 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இல் வழிகாட்டல் இலக்கம் 12 இன் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட வேண்டிய பின்வரும் தகவல்கள் ஆட்களை பதிவு செய்யும் | அவதானிப்புக்களுக்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பதில் கிடைத்திருக்கவில்லை. | தொடர்புடைய சுற்றறிக்கையுடன் இணங்குதல். |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களத்தின் 2021 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (I) | 12(ஆ) பிரகாரம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமைகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தினை செயற்படுத்திய காலச்சட்டகம் மற்றும் அச்செயற்பாடுகளிலிருந்து எதிர்பார்த்த அடைவுகள் / பெறுபேறுகள் | | |
| (II) | 12(இ) பிரகாரம் வருமானங்கள் திணைக்களத்தினால் வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு வருமான தலைப்புக்களுக்காகவும் அங்கீகரிக்கப்பட்ட வருமானங்களை சேகரிக்கும் செயல் நடவடிக்கைத் திட்டம். | | |
| (இ) | ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் பிரதான செயலாற்றல் குறிகாட்டி (KPIs) இடையே பிரதான குறிகாட்டியான ‘‘ஆண்டின் பொதுவான சேவையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களிலிருந்து விநியோகிக்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகளின் எண்ணிக்கை’’ சதவீதம் மீளாய்வாண்டின் 62 சதவீதமாக காணப்பட்டமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | அவதானிப்புக்களுக்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பதில் கிடைத்திருக்கவில்லை. | செயலாற்றல் குறிகாட்டிகளை உச்ச மட்டத்தில் பேணுதல். |

**3.2 செயற்திட்டத்தை நிறைவேற்றுவதிலான தாமதங்கள்**

இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையை வழங்கும் செயற்திட்டம் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆட்களை பதிவு செய்யும் நடைமுறையை நவீனமயப்படுத்தி பாதுகாப்பான இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையொன்றினை வழங்கும் தேவைப்பாட்டின் அடிப்படையில் பிரஜைகளை பதிவு செய்தல், இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையினை வெளியிடுதல் மற்றும் இலத்திரனியல் தேசிய பெயர்ப்பட்டியலை உருவாக்குதல் ஆகிய அங்கங்களை உள்ளடக்கிய இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை செயற்திட்டம் 2006 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப் பட்டிருந்தது. 2006 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு சந்தர்ப்பங்களில் செயற்திட்ட காலத்தை நீடித்து மற்றும் செயற்திட்டம் பல்வேறு சந்தர்ப்பங்களில் திருத்தியமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப் பட்டிருந்தது. அதற்காக மீளாய்வாண்டின் இறுதியளவில் மொத்த செலவினம் ரூபா 2,658.33 மில்லியன் ஆன போதிலும் ‘‘இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை’’ வழங்கும் கட்டம் வரையிலான செயல்முன்னேற்றத்தினை அடைந்து கொள்வதற்கு கணக்காய்வுத் திகதி வரையிலும் செயற்திட்டம் தவறியிருந்தது. | அவதானிப்புக்களுக்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பதில் கிடைத்திருக்கவில்லை. | செயற்திட்டத்தின் பணிகளை செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் நிறைவேற்றுதல். |
| (ஆ) | செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 8,000.69 மில்லியனாக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஒட்டுமொத்த செயல்முன்னேற்றத்தின் பௌதீக செயல்முன்னேற்றம் 81 சதவீதம் மற்றும் அதன் நிதி செயல்முன்னேற்றம் 33 சதவீதமாக காணப்பட்டது. அதற்கமைய | அவதானிப்புக்களுக்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பதில் கிடைத்திருக்கவில்லை. | செயற்திட்டத்தின் திட்டங்கள் மற்றும் மேற்பார்வை தொடர்பான பணிகளை சரியாகவும் நடைமுறைக்குச் சாத்தியமாகவும் மேற்கொள்ளல். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்ட மதிப்பீடுகளை தயாரித்தல், செலவின மேற்பார்வை, செயல்முன்னேற்ற மீளாய்வு மற்றும் அறிக்கையிடுதல் தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்பட்டிராமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை செயற்திட்டத்தில் 2021 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் 47 பிரதான பணிகளை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 8 பிரதான பணிகளை உள்ளடக்கிய 17 உப பணிகள் மீளாய்வாண்டிற்கு உரித்தற்றதாக காணப்பட்டதுடன் 2020 மற்றும் 2022 ஆம் வருடங்களில் திட்டமிடப்பட்ட பணிகள் என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டமையால் குறித்த திட்டங்களின் நடைமுறை தொடர்பில் கணக்காய்வில் திருப்தி கொள்ள முடியாதிருந்தது. | அவதானிப்புக்களுக்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பதில் கிடைத்திருக்கவில்லை. | செயற்திட்ட திட்டங்களை சரியாகவும் நடைமுறைக்கு பொருத்தமாகவும் தயாரித்தல். |
| (ஈ) | 2021 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் பிரகாரம் செலவினமானது ரூபா 618 மில்லியனாக காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டில் இறுதியில் உள்ளபடியான செலவினம் ரூபா 332 மில்லியன் ஆனமையால் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டின் ரூபா 286 மில்லியன் 46 சதவீதம் எஞ்சியிருந்தது. | அவதானிப்புக்களுக்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பதில் கிடைத்திருக்கவில்லை. | நடைமுறைக்கு பொருத்தமானதும் சரியானதுமான மதிப்பீடுகளை தயாரித்தல் மற்றும் உரிய இணைப்பு நடவடிக்கைகள் |
| (உ) | மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பணிகள் அதனோடினைந்த செயற்திட்ட செயல்முன்னேற்ற அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிராததுடன் ஒவ்வொரு வருடங்களிலும் மேற்கொள்வதற்கு எதிர்பார்த்த பணிகளுக்காக மொத்த செயற்திட்டக் காலத்தினுள் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்த பிரதான பணிகளை உள்ளடக்கிய செயல் முன்னேற்றம் | அவதானிப்புக்களுக்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பதில் கிடைத்திருக்கவில்லை. | செயற்திட்ட திட்டங்கள் மற்றும் செயல்முன்னேற்ற த்தை அறிக்கையிடுதல் தொடர்பில் இணக்கப்பாடு ஒன்று நிலவ வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் குறித்த பணிகளை மதிப்பீட்டிற்கு உட்படுத்துதல் கணக்காய்வில் பிரச்சினைக்குரியதாக காணப்பட்டது. | | |
| (ஊ) | செயற்திட்ட செலவின அறிக்கையின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டின் போது 04 பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் 04 பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டின் 60 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையான வீச்சில் சேமிப்புக்கள் நிலவியமை அவதானிக்கப்பட்டது. | அவதானிப்புக்களுக்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பதில் கிடைத்திருக்கவில்லை. | நடைமுறைக்கு சாத்தியமானதும் சரியானதுமான மதிப்பீடுகளை தயாரித்தல். |
| (எ) | மீளாய்வாண்டின் 8 உப பணிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாட்டினை விஞ்சி செலவினம் மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் மின்சாரம் மற்றும் நீருக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டினை விஞ்சிய ரூபா 10.73 மில்லியன் அல்லது 894 சதவீதம் செலவிடப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுக்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பதில் கிடைத்திருக்கவில்லை. | நடைமுறைக்கு சாத்தியமானதும் சரியானதுமான மதிப்பீடுகளை தயாரித்தல். |
| (ஏ) | இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை செயற்திட்டத்தின் கீழ் மூலதன செலவினங்களுக்காக (Capital Cost) செயற்திட்ட மதிப்பீட்டினுள் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிராத போதிலும் 2021 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் 2 வாகனங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 19.35 மில்லியன் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுக்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பதில் கிடைத்திருக்கவில்லை. | மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டினுள் குறித்த செலவினங்களை முகாமை செய்தல். |
| (ஐ) | அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு இதுவரையிலும் செயற்திட்டத்தினால் முடியாதிருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலும் ரூபா 79.69 மில்லியன் பதவியணியின் சம்பளம் மற்றும் படிகள் உள்ளடங்கலாக செயற்திட்டத்தின் நிர்வாக பணிகளுக்காக ரூபா 199.69 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் செயற்திட்டத்தின் உள்ளபடியான பதவியணி 29 ஆகும். | அவதானிப்புக்களுக்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பதில் கிடைத்திருக்கவில்லை. | நோக்கங்களை முன்கொண்டு செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் செலவினங்களை கட்டுப்படுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை செயற்திட்டத்தின் பிரதான பணிகள் இரண்டிற்குரிய பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் தகவல் தொழில்நுட்ப வசதிகளை அபிவிருததி செய்வதற்காக 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 1,115.26 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் தனிப்பட்ட தரவுகளின் டிஜிட்டல் மயமாக்கலில் பௌதீக செயல்முன்னேற்றம் இதுவரையிலும் காண்பிக்கப்பட்டிராமையால் குறித்த கிரயத்தின் ஆக்கபூர்வமான தன்மை மிகவும் குறைந்த மட்டத்தில் அவதானிக்கப்பட்டது. | அவதானிப்புக்களுக்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பதில் கிடைத்திருக்கவில்லை. | செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் அரச செலவினங்களை முகாமை செய்தல். |
| (ஓ) (i) | மீளாய்வாண்டின் ஏப்ரல் மாதத்தில் 04 உத்தியோகத்தர்களுக்கு மனிதவள மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஆட்சேர்க்கப்பட்டிருந்த போதிலும் எதுவித பயிற்சி மற்றும் அறிவுறுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் இந்த உத்தியோகத்தர்களின் ஊடாக செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை. எவ்வாறான போதிலும் அவ் உத்தியோகத்தர்களுக்காக 2021 ஆம் ஆண்டில் ரூபா 817,530 ஆன சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | அவதானிப்புக்களுக்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பதில் கிடைத்திருக்கவில்லை. | செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் அரச செலவினங்களை முகாமை செய்தல். |
| (ii) | இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையை வழங்குவதற்குரிய மென்பொருள் தரவுகளை சேகரிக்கும் பணிக்கு உரியதாக ஏனைய தொழில்நுட்ப உதிரிப்பாகங்களை பெற்றுக் கொள்ளல் ICTA நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் குறித்த உதிரிப்பாகங்களை வழங்காதுள்ள போதிலும் திட்டமிடப்படாத வகையல் மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு புதிய ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | அவதானிப்புக்களுக்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பதில் கிடைத்திருக்கவில்லை. | பதவியணி நிர்வாகம் முறைமைப்படுத்தப் படல். |

| | | | |
|---|---|---|---|
| (ஔ) | மீளாய்வாண்டின் போது 06 பெறுகை பணிகளுக்காக மதிப்பிடப்பட்ட பெறுமதியினை விஞ்சி 7 சதவீதம் முதல் 63 சதவீதம் வரையிலும் கூடுதலான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுக்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பதில் கிடைத்திருக்கவில்லை. | பெறுகை நடவடிக்கைகளை முறைமைப்படுத்தல். |

## 3.3 ஏனைய அவதானிப்புகள்

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய அடையாள அட்டையை பெற்றுக் கொள்வதற்காக 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக சட்டப்பிரிவிற்கு கிடைத்துள்ள மொத்த குறைபாடுகளுடனான விண்ணப்பங்களின் எண்ணிக்கை 2067 ஆக காணப்பட்டதுடன் அவற்றுள் முறையே 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் கிடைத்த எண்ணிக்கைகள் 185 மற்றும் 348 ஆகும். | அவதானிப்புக்களுக்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பதில் கிடைத்திருக்கவில்லை. | விண்ணப்பங்களை பரீட்சிக்கும் நடைமுறை செயற்திறனாக்குதல் |
| (ஆ) | பிரதான இருப்பு பேரேட்டின் அச்சீட்டு பிரிவிற்கு முன்னரே அச்சிடப்பட்ட அட்டைகளை விநியோகிக்கும் போது அந்த பிரதான களஞ்சியத்தின் அட்டைகளின் பாதுகாக்கப்பட்ட இருப்பொன்றை பேணாது மொத்த அட்டைகளும் அச்சிடல் பிரிவிற்கு விநியோகிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன. | அவதானிப்புக்களுக்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பதில் கிடைத்திருக்கவில்லை. | இருப்புக் கட்டுப்பாடு முறைமைப்படுத்தபடல். |
| (இ) | ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் கணனி கட்டமைப்பின் ஊடாக “2021 ஆம் ஆண்டின் விண்ணப்பங்கள் | அவதானிப்புக்களுக்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பதில் கிடைத்திருக்கவில்லை. | கணனி கட்டமைப்பு செயற்திறனாகவும் ஆக்கபூர்வமான தாகவும் பயன்படுத்தல் |

தொடர்பான அறிக்கைகள்'' (All Applications Process Report) 2022 ஆம் ஆண்டினுள் பெற்றுக் கொள்ளும் போது ஒவ்வொரு சந்தர்ப்பங்களில் கிடைக்கும் தகவல்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

**3.4 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவை - 2006 இன் 4 ஆம் அத்தியாயத்தின் 4.1.1(அ) மற்றும் 4.2.1(ஆ) பிரிவுகளின் பிரகாரம் முழுமையான பெறுகை நடைமுறையினையும் செயற்திறனாக திட்டமிடுதல் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் ஆகக்குறைந்தது மூன்று வருட காலப்பகுதிக்கு உத்தேச பெறுகை நடவடிக்கைகள் பிரதான பெறுகைகள் திட்டத்தில் பட்டியலிடப்பட்டிருக்க வேண்டிய போதிலும் ஒவ்வொரு ஆண்டினதும் பெறுகைப் பபணிகள் மாத்திரம் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | இணங்காணப்பட்ட தேவைப்பாடுகள் 2022 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட பெறுகைகள் திட்டத்தில் பட்டியல்படுத்துவதற்கும் எஞ்சிய வருடங்களில் பிரதான பேரேட்டுத் திட்டத்தில் பட்டியல்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தொடர்புடைய வழிகாட்டல் களுக்கு இணங்குதல். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2006 சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க தேசிய பெறுகைகள் முகவரகத்தின் சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தியினதும் பெறுகைகள் செயல்வழிக் கோவையின் 4.2.1 மாதிரியின் பிரகாரமும் திணைக்களத்தினால் விரிவான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2022 ஆம் ஆண்டின் போது விரிவான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்படும். | தொடர்புடைய சுற்றறிக்கைகளுக் கு இணங்க விரிவான பெறுகைகள் திட்டமொன்று தயாரித்தல். |
| (இ) | திருத்தப்பட்ட பெறுகைகள் திட்டம் மற்றும் அதனுடன் தொடர்புடைய உள்ளபடியான செலவினங்களை பரீட்சிக்கும் போது திருத்தப்பட்ட பெறுகைகள் திட்டத்தினுள் உள்ளடங்கியுள்ள உருப்படிகள் 66 இல் 50 உருப்படிகயும் மதிப்பிடப்பட்ட பெறுமதி மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் சமமாக உள்ளமையால் உள்ளபடியான செலவினம் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் பெறுகைகள் திட்டத்தை திருத்தியுள்ளமை வெளிப்படுத்தப்பட்டது. இதன் மூலம் திட்டத்தை தயாரித்த நோக்கம் நிறைவேறவில்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | பெறுகைகள் திட்டத்தை திருத்தும் சந்தர்ப்பத்தில் புதிதாக ஏற்படும் தேவைப்பாடுகளுக்காக உரிய நிதியேற்பாடுகளை சரியாக நிச்சயித்துக் கொள்வதற்காகவும் அதுவரையிலும் மேற்கொள்ளப்பட்ட பெறுகை பணிகளுக்கு மேற்கொண்ட உள்ளபடியான செலவினங்களை பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கும் நேர்ந்துள்ளமை. | செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் திட்டங்களை தயாரித்தல். |
| (ஈ) | திணைக்களத்தினால் Epson L805 ரகத்திலான அச்சீட்டு இயந்திரங்களின் தேவையான மை கொள்வனவு செய்வதற்காக 2021 பெப்ரவரி 02 ஆந் திகதி 05 நிறுவனங்களிலிருந்து கூறுவிலைகள் கோரப்பட்டுள்ளதுடன் 02 நிறுவனங்கள் மாத்திரம் விலைக்கேள்விகளை முன்வைத்திருந்தன. | விலைக்கேள்வி திறக்கும் போது அறிக்கையை தயாரிக்கும் போது கணனியின் நினைவுப் பெட்டகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த முன்னைய விலைக் கேள்வியை திறக்கும் போது அறிக்கையொன்று திருத்தப்பட்டுள்ளதுடன் தாமதமொன்றுடனான விலைக் கேள்வியினை திறக்கும் போது குறிப்பின் | பெறுகைகள் செயற்தினாகவும் உரிய முறையிலும் மேற்கொள்ளப் படல். |

| | | | |
|---|---|---|---|
| | எவ்வாறான போதிலும் விலைக்கேள்விகளை திறக்கும் போது அறிக்கையில் 6 விலைக் கேள்விகளுக்குரியதாக தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அவ்வாறே விலைக்கேள்விகளை திறக்கும் போது அறிக்கையின் கூறுவிலை கோருவதற்கு முன்னைய ஆண்டின் அதாவது 2020 ஆம் ஆண்டின் திகதிகள் குறிப்பிடப்பட்டிருந்தது. | திகதியானது 2020.˙.02.˙.09 ஆக ஆண்டு தவறுதலாக பதிவு செய்யப்பட்டுள்ளது. | |
| (உ) (i) | இத்திணைக்களத்தின் கணனி கட்டமைப்பின் பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி பணிகளுக்காக தனியார் நிறுவனமொன்றுடன் 2020 ஒக்தோபர் 27 ஆந் திகதி முதல் 2021 ஒக்தோபர் 26 ஆந் திகதி வரையிலும் ஏற்படுத்தப்பட்டுள்ள உடன்படிக்கையின் ஆரம்பத் திகதிக்கு இரண்டு மாதங்களின் பின்னர் அதாவது 2020 திசெம்பர் 21 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த துடன் குறித்த சேவை தொடர்பில் பெறுகைகள் குழுவின் தீர்மானமானது வழங்கப்பட்டிருந்தது உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட ஆரம்பத் திகதியின் பின்னரான திகதியொன்றான 2020 திசெம்பர் 10 ஆந் திகதியே ஆகும். | இந்நிறுவனத்துடன் முன்னைய வருடங்களில் மேற்கொண்ட உடன்படிக்கைகளில் காணப்படாத நிபந்தனைகள் தொடர்பில் பரிந்துரைகளை பெற்றுக் கொள்வதற்கு தகவல்கள் மற்றும் தொடர்பால் முகவர் நிறுவனத்திற்கு அனுப்பி வைப்பதற்கு தாமதம் ஏற்பட்டுள்ளது. | உடன்படிக்கைகள் நாளதுவரையாக பேணிச் செல்லல். |
| (ii) | 2020 ஒக்தோபர் 27 ஆந் திகதி முதல் 2021 ஒக்தோபர் 26 ஆந் திகதி வரையிலும் திணைக்களத்தின் கணனி கட்டமைப்பின் பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி பணிகளுக்காக தனியார் நிறுவனமொன்றுடன் கைச்சாத்திடுவதற்கு முன்னர் தகவல் மற்றும் | திருத்தப்பட்ட வரைபு உடன்படிக்கையின் கணினி மென்பொருள் அபிவிருத்தி பணிகளுக்கு மேலதிகமான செலவினமொன்று திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதாக உள்ளடக்கப்பட்டிருந்த நிபந்தனை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப | உடன்படிக்கை களை ஆக்கபூர்வமாக பேணிச் செல்லல். |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் (ICTA) இடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பரிந்துரைகளின் பிரகாரம் உடன்படிக்கைகள் உள்ளடக்கப்பட வேண்டிய வருடாந்தம் செலுத்த வேண்டிய அச்சீடுகளுக்கு முன்னரான கட்டத்தில் நிலவும் ஆகக்குறைந்த விண்ணப்பங்கள் (Processed Application) அளவானது கடந்த வருடங்களில் நிலவிய நிலைமையை கவனத்தில் கொண்டு திருத்தப்பட வேண்டிய பொதிலும் பெறுகைகள் குழுவினால் முன்னைய வருடங்களில் நிலவிய நிலைமையை கருத்தில் கொண்டு குறித்த உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு இணங்க அந்த தனியார் நிறுவனத்துடன் மீண்டும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதனால் 2021 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட காலப்பகுதிக்குரிய அச்சீடுகளுக்கு முன்னைய கட்டத்தில் நிலவிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை 458,173 ஆன போதிலும் ஒரு மில்லியன் விண்ணப்பங்களுக்காக கொடுப்பனவு மேற்கொள்வதற்கு நேர்ந்திருந்தது. இக்காலப்பகுதியில் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை 319,592 ஆகும். | முகவர் நிறுவனத்தினால் அகற்றப்பட்டிருந்தமையால் முன்னர் நிலவிய உடன்படிக்கையின் பிரகாரம் மீண்டும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு உரிய காலப்பகுதியினுள் ஆகக்குறைந்த 1 மில்லியன் விண்ணப்பங்களுக்காக கொடுப்பனவு பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | |
| (ஊ) | 2021 ஆம் ஆண்டின் போது தேசிய அடையாள அட்டைக்காக PVC அட்டைகள் 4 இலட்சம் கொள்வனவு செய்வதற்கு மற்றும் முன் அச்சீட்டு பிரிவு (Art Work) அச்சிடல் | அதிக எண்ணிக்கையான விண்ணப்பங்கள் காணப்பட்டமையால் துரிதமாக தேசிய அடையாள அட்டையை வழங்கும் தேவைப்பாட்டின் அடிப்படையில் வெற்று | பெறுகை நடைமுறை செயற்திறனாகவும் ஆக்கபூர்வமான தாகவும் மேற்கொள்ளல். |

| | |
|---|---|
| பெறுகை நடைமுறைகளில் இரண்டாக மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதற்காக ஒரே வழங்குனர் தெரிவு செய்யப்பட்டிருந்தமையால் திணைக்களத்தினால் தெரிவு நடவடிக்கைகளுக்கு மேலதிகமான காலம் மற்றும் கிரயம் மேற்கொள்ளப்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. மேற்படி இரு பணிகள் தொடர்பிலும் பெறுகை நடைமுறைகள் இரண்டு மேற்கொள்ளப்பட்ட போதிலும் 2021 யூன் 18 ஆந் திகதி திணைக்களத்தினால் 2 இலட்சம் PVC அட்டைகளை மீள கொள்வனவு செய்தல் மற்றும் முன்அச்சீட்டு பிரிவு ஆகிய இரு பணிகளும் ஒரே மீள் கட்டளையிடலில் மேற்கொள்ளப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | அட்டைகளை கொள்வனவு செய்து ஆகக்குறைந்த கிரயத்துடன் திணைக்களத்தின் லேசர் அச்சீட்டு திணைக்களத்தின் ஊடாக அச்சிடுவதற்கு தீர்மானித்திருந்த போதிலும் அதற்காக அதிக காலம் எடுக்கும் என்பதால் அச்சீட்டு பணிகளுக்காக மீண்டும் கூறுவிலைகளை கோரி முன் அச்சீட்டு பணிகளை வெளிவாரி நிறுவனம் ஒன்றின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

## 3.5 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திட்டமிடப்பட்ட 05 பதவியணி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டிராததுடன் அதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா 725,000 ஆகும். | அவதானிப்புக்களுக்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பதில் கிடைத்திருக்கவில்லை. | ஆக்கபூர்வ மானதாகவும் செயற்திறனாகவும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல். |
| (ஆ) | பதிவு செய்தல், தரப்பரிசோதனை, அங்கீகரித்தல், பதிவேடுகளின் பரீட்சிப்பு, தரவுகளை உள்ளிடல், சிங்களம் மற்றும் தமிழ் மொழிபெயர்ப்பு தொடர்பான பயிற்சி பாடநெறிகள் மற்றும் | அவதானிப்புக்களுக்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பதில் கிடைத்திருக்கவில்லை. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | சேவை ஆரம்பிப்பு பயிற்சிகளுக்காக 266 உத்தியோகத்தர்களை பங்குபற்றச் செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் 58 உத்தியோகத்தர்களுக்காக சேவை ஆரம்ப பயிற்சிகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டுள்ள துடன் ஆண்டின் இறுதி வரையிலும் மதிப்பிடப்பட்ட ரூபா 160,000 ஆன மொத்த தொகையும் எஞ்சியிருந்தது. | | |
| (இ) | 145 உத்தியோகத்தர் களுக்காக அரச மொழி ஆங்கில பாடநெறிக்காக ரூபா 125,000 மதிப்பிடப்பட்டுள்ள போதிலும் மீளாய்வாண்டில் ஒரு உத்தியோகத்தருக்காக மாத்திரம் ரூபா 40,000 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுக்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பதில் கிடைத்திருக்கவில்லை. | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டிற்காக ''நிதிப்பிரமாணம், அலுவலக செயல் வழி விதிகள், விடுமுறை மற்றும் தாபன விதிக்கோவை'' எனும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூபா 120,000 மதிப்பிடப்பட்டுள்ள போதிலும் 2021 ஆம் ஆண்டின் போது அப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 15 உப நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டு அதற்காக ரூபா 702,220 செலவிடப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுக்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பதில் கிடைத்திருக்கவில்லை. | - மேற்படி - |

**4. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 1475 ஆக காணப்பட்டதுடன் உள்ளபடியான பதவியணி - 1278 ஆனமையால் வெற்றிடங்கள் மற்றும் மிகைப் பதவியணி 200 மற்றும் 03 ஆகும். | திணைக்களத்திற்காக பயிலுனர் பட்டதாரி பதவிகள் அங்கீகரிக்கப்படவில்லை. ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட பட்டதாரி பயிலுனர் உத்தியோகத்தர்கள் மூவர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | பதவியணி நிர்வாகம் உரிய முறையில் மேற்கொள்ளல். |
| (ஆ) சட்ட உத்தியோகத்தர் உள்ளடங்கலாக 06 பதவிகளுக்காக அதன் மொத்த அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை வெற்றிடமாக நிலவியது. | கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக மேலதிக நிதியேற்பாட்டை மேற்கொள்ளுதல் வரையறைகள் காணப்பட்டமையால் மேற்படி பதவிகளுக்கு ஆட்சேர்க்கும் தேவைப்பாடு பின்னர் கருத்தில் கொள்வது பொருத்தமானது என்பது உத்தேசிக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |